SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

பெயர் : தமிழ் பயிற்சித்தாள் - 3 வரிசை எண் :

வகுப்பு : 6 தேதி : 20.7.19

# "இரவு நேர விலங்கியல் சுற்றுலா"

ஜூன் மாத விடுமுறை தொடங்கியது. மீனாவும் தன் குடும்பத்துடன் மலேசியவிலிருந்து சிங்கப்பூரில் வசிக்கும் தன் அத்தை வீட்டுக்கு வந்தார்கள். அங்கே மீனா தன் அத்தையின் மகளை பார்த்தால் அவர்கள் சிறு வயதிலிருந்து மிகவும் நெருக்கமாக இருந்தார்கள். ஒரு வருடம் கழித்து சந்தித்தால் இருவருக்கும் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. மீனாவும் கமலாவும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார்கள்.

மீனாவின் அத்தை மீனாவையும் கமலாவையும் இரவு நேர விலங்கியல் சுற்றுலாவுக்கு அழைத்து செல்லப்போகிறேன் என்று கூறினார். இருவரும் மிகவும் ஆவலாக இருந்தார்கள் காரணம் அவர்கள் இருவர்களுக்கும் விலங்குகள் என்றால் கொள்ளை ஆசை. மறுநாள் இரவு அவர்கள் இரவு நேர விலங்கியல் சுற்றுலாவுக்கு சென்றார்கள். விலங்கியல் தோட்டதின் இயற்க்கை சூழல் அவர்களுக்கு பிடித்திருந்தது. பிறகு அவர்கள் டிராம் வண்டியில் ஏறினார்கள். அது மீனாவுக்கும் கமலாவுக்கும் ஒரு புது அனுபவமாக இருந்தது.

சில நேரங்களில், டிராம் வண்டி விலங்குகளின் அருகில் நெருங்கிய போது கமலா பயந்துப்போனாள். டிராம் வண்டியில் அவர்கள் நிறைய விலங்குகளை பார்த்தார்கள். டிராம் வண்டி அரை மணி நேரம் கழித்து முடிந்தது. பிறகு அவர்கள், Creatures of the Night Show என்ற நிகழ்ச்சியைப் பார்க்க சென்றார்கள். அங்கே விலங்குகள் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தியது. கண்காட்சி முடிந்ததும் மூவரும் நடக்கும் பாதையில் சென்றார்கள். சிங்கம் ஒன்று உரக்கக் கர்ஜித்ததை மீனா கேட்டாள். அவள் கமலாவையும் தன் அத்தையும் சிங்கம் இருந்த இடத்துக்கு அவர்களை அழைத்து சென்றால். அங்கே மிருகக்காட்சி சாலை மேற்பார்வையாளர் சிங்கத்துக்கு உணவு கொடுத்துக்கொண்டிருந்தார்.

மீனா அவரிடம் சிங்கத்திற்கு தானும் உணவு கொடுக்க அனுமதி கேட்டால். அவரும் அனுமதி கொடுத்தார். இது மீனாவுக்கு ஒரு புது அனுபவமாக இருந்தது. மிருகக்காட்சி சாலை மேற்பார்வையாளர் கமலாவைவும் உணவு கொடுக்க அழைத்தார். ஆனால் கமலா வரவில்லை அதனால் மீனாவின் அத்தை உணவு கொடுத்தார்.

இரவு மணி பத்தானது, அவர்களுக்கு பசித்து, அதனால் அவர்கள் மிருகக்காட்சி சாலை அருகில் இருந்த உணவகத்துக்கு சென்று சாப்பிட்டார்கள். சாப்பாடு மிகவும் ருசியாக இருந்தது, மூவரும் சாப்பட்டை ருசித்து சாப்பிட்டார்கள். நேரமாகிவிட்டதால் அவர்கள் விடு திரும்பினர்கள். மீனாவுக்கு இரவு நேர விலங்கியல் சுற்றுலா மிகவும் பிடித்திருந்தது. சிங்கப்பூரில் அவளுக்கு இது தான் மிகவும் பிடித்திருந்தது.

**மீனா எதற்காக சிங்கபூருக்கு வந்தாள்?** *

- அத்தையை பார்க்க வந்தாள்
- ஜூன் மாதம் விடுமுறையை செலவிட வந்தாள்
- கமலாவை பார்க்க வந்தாள்
- மேல் குறிப்பிட்டுள்ள அனைத்தும்

**மீனாவும் கமலாவும் ஏன் ஆவலாக இருந்தார்கள்?** *

- அவர்கள் இரவு நேர விலங்கியல் சுற்றுலாவுக்கு செல்லவிருப்பதால்
- அவர்களுக்கு விலங்குகள் என்றால் கொள்ளை ஆசை
- இரவில் வெளியே செல்லவிருந்ததால்
- எங்கே செல்லவிருக்கின்றோம் என்பதை தெரிந்துக்கொண்டதால்

**கமலா எப்போது பயபட்டாள்?** *

- விலங்குகளை பார்த்தபோது
- விலங்குகளுக்கு உணவு கொடுக்கும்போது
- டிராம் வண்டி விலங்குகளின் அருகில் நெருங்குகியபோது
- டிராம் வண்டி அரை மணி நேரம் சென்றதால்

**எது மீனாவுக்கு ஒரு புது அனுபவமாக இருந்தது?** *

- சிங்கத்திற்கு உணவு கொடுத்தது
- டிராம் வண்டியில் சென்றது
- விலங்குகளை தொட்டது
- இரவில் விலங்குகளைப் பார்த்தது

**அவர்கள் எங்கே உணவு சாப்பிட்டார்கள்?** *

- வீட்டில் சாப்பிட்டார்கள்
- உணவகத்தில் சாப்பிட்டார்கள்
- வீட்டின் அருகில் இருந்த உணவகத்தில் சாப்பிட்டார்கள்
- மிருகக்காட்சி சாலை அருகில் இருந்த உணவகத்தில் சாப்பிட்டார்கள்